# TNPSC GROUP – II தேர்வு
## ஒரிஜினல் வினாத்தாள் - 1996

## பொது அறிவும் பொதுத் தமிழும்

**1. ஒரு பொருள் புவிஈர்ப்பு விசையிலிருந்து விடுபட்டுச் செல்ல அதற்குத் தரப்பட வேண்டிய மீச்சிறு திசைவேகம்**
A) 8.2 மீட்டர் / வினாடி
B) 11.2 மீட்டர் / வினாடி
C) 8.2 கிலோ மீட்டர் / வினாடி
D) 11.2 கிலோ மீட்டர் / வினாடி

**2. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க.**
**கருத்து (A) :** ஒரு இரும்புத்துண்டு பாதரசத்தில் மிதக்கும், ஆனால் நீரில் மூழ்கும்.
**காரணம் (R):** இரும்பின் அடர்த்தி நீர், பாதரசத்தை விடக் குறைவு.
**கீழ்க்கண்ட குறியீடுகளுக்கு ஏற்ப உங்களது விடையைத் தேர்ந்தெடுக்க**
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
B) (A)மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமில்லை
C) (A) சரி; ஆனால் (R) தவறு
D) (A) தவறு; ஆனால் (R) சரி

**3. பட்டியல் I ஐயும் பட்டியல் II ஐயும் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) விசையின் திருப்புத்திறன் | 1) ஜூல் |
| b) ஆற்றல் | 2) F x S |
| c) திறன் | 3) நியூட்டன்–மீட்டர் |
| d) வேலை | 4) வாட் |

***குறியீடுகள்:***

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 2 | 4 | 3 | 1 |

**4. கானல் நீர் தோன்றுவது**
A) ஒளிப் பிரதிபலிப்பால்
B) முழு அகப் பிரதிபலிப்பால்
C) விளிம்பு விளைவால்
D) ஒளி விலகலால்

**5. அனிராய்டு பாரமானியில் பயன்படுத்தப்படும் திரவம்**
A) பாதரசம்
B) ஆல்கஹால்
C) தூய நீர்
D) எவ்வித திரவமும் இல்லை

**6. ஒளியின் எந்த நிறம் நீண்ட அலைநீளம் கொண்டுள்ளது?**
A) ஊதா B) பச்சை
C) மஞ்சள் D) சிவப்பு

**7. பின்வரும் கூற்றுகளை ஆய்வு செய்க.**
I. கொதித்தல் எல்லா வெப்பநிலைகளிலும் நிகழும்
II. ஆவியாதல் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் நிகழும்
III. கொதித்தல் திரவத்தின் மேற்பரப்பில் நிகழும்
IV. ஆவியாதல் திரவம் முழுவதும் நிகழும்
**மேலே சொன்ன கருத்துக்களில்**
A) அனைத்தும் சரியானவை
B) அனைத்தும் தவறானவை
C) I மற்றும் II சரியானவை, III மற்றும் IV தவறானவை
D) I மற்றும் III சரியானவை, II மற்றும் IV தவறானவை

**8. உயர்ந்த வெப்பநிலையைக் கணக்கிட உதவும் உபகரணத்தின் பெயர்**
A) ஹைட்ரோமீட்டர்
B) பைரோமீட்டர்
C) போட்டோமீட்டர்
D) சோனாமீட்டர்

**9. ஒலி எதன் ஊடே பரவுவதில்லை?**
A) வாயுக்கள் B) திடப்பொருள்கள்
C) நீர் D) வெற்றிடம்

**10. குழாய் உள்ள ஊதுகுழல் கருவி**
A) புல்லாங்குழல் B) ஆர்மோனியம்
C) தாரை D) நாதஸ்வரம்

**11. ஒரு 100 வாட், 220 வோல்ட் கொண்ட விளக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய மின்னோட்டம்**
A) 2.2 ஆம்பியர்
B) 5/11 ஆம்பியர்
C) 22000 ஆம்பியர்
D) 1.1 ஆம்பியர்

**12. காந்தக் கேடயமாகப் பயன்படும் பொருள்**
A) மரம் B) தேனிரும்பு
C) கண்ணாடி D) காகிதம்

**13. X கதிர்கள் எதன் வழியே ஊடுருவிச் செல்லாது?**
A) கண்ணாடி B) எலும்பு
C) மரம் D) தோல்

**14. ஒரு எலக்ட்ரானுடைய எடை $9.11 \times 10^{-28}$ கிராம் எனில் ஒரு கிராமில் எத்தனை எலக்ட்ரான்கள் உள்ளன?**
A) $1.09 \times 10^{27}$ B) $2.56 \times 10^{24}$
C) $2.18 \times 10^{27}$ D) $3.27 \times 10^{27}$

**15. லோதர் மேயரின் அணுப் பருமன் கோட்டின் முகடுகளில் காணப்படும் தனிமங்கள்**
A) ஹாலஜன்கள்
B) கார உலோகங்கள்
C) காரமண் உலோகங்கள்
D) மந்த வாயுக்கள்

**16. கால்சியம்–கார்பைடு குளிர்ந்த நீருடன் வினை புரியும்போது வெளிவரும் வாயு**
A) அசிட்டிலீன் B) ஆக்ஸிஜன்
C) எத்திலீன் D) மீதேன்

**17. ரப்பரை பதனிடுவதற்காக பயன்படுத்தப்படும் தனிமம்**
A) போரான் B) அயோடின்
C) சல்ஃபர் D) பாஸ்பரஸ்

**18. யூரியா மிகவும் நல்ல உரம். ஏனென்றால்**
A) இதை எளிதாகத் தயாரிக்கலாம்
B) இதில் நைட்ரஜனின் அளவு மிகவும் அதிகம்
C) இது மிகவும் எளிதாகக் கிடைக்கிறது
D) இவற்றுள் எதுவும் இல்லை

**19. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் அயனிப்படிகம் எது?**
A) பனிக்கட்டி B) உப்பு
C) வைரம் D) மணல்

**20. நகைகள் செய்யப்படும் தங்கம் கீழ்க்கண்ட வற்றுள் ஓர் உலோகக் கலவையாகும்.**
A) தங்கம் + தாமிரம்
B) தங்கம் + வெள்ளி
C) தங்கம் + வெண்கலம்
D) தங்கம் + மெர்குரி

**21. ஹாலஜன் தொகுதியில் எலக்ட்ரான் கவர் ஆற்றல் குறைவாக உள்ள தனிமம்**
A) புரோமின் B) குளோரின்
C) புளோரின் D) அயோடின்

**22. ஆவிநிலையில் பாஸ்பரஸின் அமைப்பு**
A) $P_2$ B) $P$
C) $P_4$ D) $P_3$

**23. அமோனியா என்பது ஓர்**
A) அமிலம்
B) காரம்
C) நடுநிலைமையுடையது
D) ஈரியல்புடையது

**24. வடித்துப் பிரித்த ஆல்கஹால் என்பது**
A) 95 % எத்தனால்
B) 100 % எத்தனால்
C) எத்தனாலும் 5 % மெத்தனாலும் சேர்ந்தது
D) சக்திமிகு ஆல்கஹால்

**25. பல கரிமச் சேர்மங்கள் ஒரே மூலக்கூறு வாய்பாட்டைப் பெற்றும் பௌதிக மற்றும் வேதிப்பண்புகளில் மாறுபட்டும் உள்ளது. இவ்வகைக் கோட்பாடு ................. என்று குறிக்கப் படுகிறது.**
A) ஒரின வரிசை
B) ஐசோமெரிசம்
C) ஐசோடோப்புகள்
D) நொதித்தல்

**26. சமையல் சோடாவின் வேதிப் பெயர்**
A) சோடியம் குளோரைடு
B) சோடியம் பாஸ்ஃபேட்
C) சோடியம் கார்பனேட்
D) சோடியம் பைகார்பனேட்

**27. தொழிலியல் முறையில், எத்திலீனை பாலிஎதிலீனாக மாற்றும் முறையானது**
A) ஹைடிரஜனேற்றம்
B) பதிலீடு செய்தல்
C) பாலிமராக்கல்
D) சேர்க்கை

**28. எப்சம் உப்பு என்பது**
A) $ZnSO_4.\ 7H_2O$ B) $MgSO_4.\ 7H_2O$
C) $CuSO_4.\ 7H_2O$ D) $FeSO_4.\ 7H_2O$

**29. பாஸிடியோபோர்களின் நிறம்**
A) சிவப்பு B) கறுப்பு
C) பிரௌன் D) பச்சை

**30. மரபியலின் தந்தை எனப்படுபவர்**
A) சார்லஸ் டார்வின்
B) ஜி.ஜே. மெண்டல்
C) மெல்வின் கால்வின்
D) காரல் காரன்ஸ்

**31. கீழ்க்கண்டவற்றுள் எது ஹார்மோன் இல்லை?**
A) ஆக்ஸின் B) ஜிப்ரல்லின்
C) எத்திலின் D) அயோடின்

**32. வெஸ்டர்ன் பிளாட் சோதனையில் கண்டறியப் படும் நோய்**
A) கொனீயா
B) பைலேரியா
C) இன்புளுயன்சா
D) எய்ட்ஸ்

**33. பருப்பு வகைகளில் அதிகம் உள்ள உணவுப் பொருள்**
A) புரதங்கள்
B) கார்போஹைட்ரேட்டுகள்
C) கொழுப்பு
D) வைட்டமின்கள்

**34. பேரிக்காய் கடினமாக இருப்பதற்கான காரணம்**
A) ஸ்கிளீரைடுகள்
B) வெஸல்கள்
C) ட்ரக்கீடுகள்
D) நார்கள்

**35. பெடாலஜி என்னும் பிரிவில் ஆராயப்படுவது**
A) மாசுறுதல்
B) நோய்கள்
C) மண்
D) மகரந்தச் சேர்க்கை

**36. செல்லின் ஆற்றல் நிலையம் எனப்படுவது**
A) பசுங்கணிகம்
B) மைட்டோகாண்டிரியா
C) உட்கரு
D) ரிபோசோம்

**37. காற்றில் பரவும் நோய்**
A) மஞ்சள் காமாலை
B) டைபாய்டு
C) எய்ட்ஸ்
D) டீப்தீரியா

**38. சின்கோனா தாவர மரப்பட்டையிலிருந்து பெறப்படும் மருந்து**
A) பெனிசிலின்
B) குவினைன்
C) ஸ்ட்ரெப்டோமைசின்
D) பாலிமைசின்

**39. கீழ்க்கண்டவற்றுள் எது தாவரத்திலிருந்து பெறப்படுவதில்லை?**
A) கற்பூரம்
B) டர்பன்டைன்
C) ரப்பர்
D) பட்டு

**40. கீழ்க்கண்டவற்றுள் பச்சையத்தில் காணப்படும் முக்கிய தனிமம் எது?**
A) மக்னீஷியம் B) கால்ஷியம்
C) பொட்டாசியம் D) சோடியம்

**41. புற்கள்**
A) சல்லி வேர்கள் கொண்டவை
B) ஆணி வேர்கள் கொண்டவை
C) தூண் வேர்கள் கொண்டவை
D) உறிஞ்சு வேர்கள் கொண்டவை

**42. முதல்நிலை உற்பத்தியாளர்கள்**
A) பாக்டீரியங்கள்
B) பசுந்தாவரங்கள்
C) சிறு பூச்சிகள்
D) கார்னிவோர்ஸ்

**43. கண்ணின் விழித்திரையில் காணப்படும் உணர்வற்ற புள்ளி**
A) மஞ்சள் புள்ளி
B) குருட்டுப் புள்ளி
C) விழி வெண்படலம்
D) கொராய்டு படலம்

**44. பாரம்பரியப் பண்புகளுக்குக் காரணமாக இருப்பவை**
A) உட்கரு
B) ஜீன்கள்
C) மைட்டோகான்டிரியன்
D) சைட்டோபிளாசம்

**45. இரத்தம் சிவப்பாக இருப்பதற்குக் காரணம்**
A) நிணநீர்
B) பிளாஸ்மா
C) மோனோஃபில்கள்
D) ஹீமோகுளோபின்

**46. இராணித் தேனீயின் முக்கிய வேலை**
A) இளம் உயிரிகளைப் பாதுகாத்தல்
B) தேன் கூட்டினைக் கட்டுதல்
C) தேனை சேகரித்தல்
D) முட்டையிடுதல்

**47. குழந்தைகளில் காணப்படும் பற்களின் வகைகள்**
A) ஒற்றை வகைப் பற்கள்
B) இரட்டை வகைப் பற்கள்
C) பால் பற்கள்
D) ஒத்த பற்கள்

**48. இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர்**
A) வில்லியம் ஹார்வி
B) எட்வர்டு ஜென்னர்
C) நியூட்டன்
D) அலெக்ஸாண்டர்

**49. அதிக அளவில் பால் தரும் பசுக்கள்**
A) சிந்தி B) பிரேமா
C) காரா D) ரோடு

**50. வெளவால்களின் சிறப்புப் பண்பு**
A) மீயொலி எதிரொலித்தல்
B) ஒலி
C) கதிரியக்கம்
D) அதிர்வு

**51. மெட்டாமெரிசம் அல்லது கண்டப்பகுப்பு முறை உடலில் தெளிவாகக் காணப்படும் விலங்குத் தொகுப்பு**
A) தட்டைப் புழுக்கள்
B) வலைத்தசைப் புழுக்கள்
C) மெல்லுடலிகள்
D) முட்தோலிகள்

**52. மண்புழு உழவனின் நண்பன் எனப்படுவதன் காரணம்**
A) மண்ணின் கரிம மக்குப் பொருள்களின் அளவை அதிகரிப்பதால்
B) மண்ணை மிருதுவாக மாற்றுவதால்
C) மண்ணுள் காற்றுப்புகும் அளவை அதிகரிப்பதால்
D) மண்ணின் ஈரப்பதத்தை அதிகரிப்பதால்

**53. எந்த இரத்த நிறமிப் பொருள் பாலூட்டிகளின் இரத்தத்தில் இருப்பதால் தான் அது சிவப்பு நிறத்தில் உள்ளது?**
A) ஹீமோசையனின்
B) ஹீம் எரித்திரின்
C) குளோரா குரூரின்
D) ஹீமோகுளோபின்

**54. புறாவில் அரைவை இருப்பது எதனுடன் தொடர்புடையதாக இருப்பதால்?**
A) அலகு இருப்பதால்
B) இறகு இருப்பதால்
C) பற்கள் இல்லாததால்
D) உமிழ்நீர் சுரப்பிகள் இல்லாததால்

**55. புகை பிடித்தலால் அதிகம் பாதிக்கப்படும் பகுதி**
A) சிறுநீரகம் B) இதயம்
C) நுரையீரல் D) இரைப்பை

**56. உயிரினங்களில் இரவு பகல் எந்நேரமும் நடைபெறும் நிகழ்ச்சி**
A) செரிமாணம்
B) கழிவு நீக்கம்
C) சுவாசித்தல்
D) வியர்த்தல்

**57. கீழ் குறிப்பிட்டவைகளில் எது இந்து சமயத்திற்கும் அதன் கலாச்சாரத்திற்கும் அடித்தளமாக விளங்குகிறது?**
A) ஆசரம முறை
B) சாதி முறை
C) தர்ம சூத்திரங்கள்
D) வேதங்கள்

**58. சிந்து சமவெளி நாகரிகம் ஓர்**
A) ஆரியர் அல்லாத நாகரீகம்
B) ஆரிய நாகரீகத்திற்கு முந்தியது
C) ஒரு திராவிட நாகரீகம்
D) எல்லாமே பொருந்தும்

**59. சக ஆண்டு எனப்படுவது**

A) கி.பி. 27 B) கி.பி. 78

C) கி.பி. 102 D) கி.பி. 98

**60. மௌரியப் பேரரசை நிறுவியவர்**

A) சமுத்திரகுப்தர்

B) முதலாம் சந்திரகுப்தர்

C) சந்திரகுப்த மௌரியர்

D) ஸ்கந்த குப்தர்

**61. சாதவாகனர்களின் தலைநகரம்**

A) வாதாபி B) காஞ்சி

C) ஸ்ரீகாகுளம் D) கானோஜி

**62. எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?**

A) கல்ஹனர் – சியூக்கி

B) விசாகத்தர் – இராஜதரங்கிணி

C) காளிதாசர் – மாளவிகாக்னிமித்திரம்

D) யுவான் சுவாங் – முத்ர ராட்க்ஷஸம்

**63. திகம்பரர் என்ற சமய பிரிவினர்**

A) இந்துக்கள்

B) புத்த மதத்தினர்

C) சமணர்கள்

D) சீக்கியர்கள்

**64. சித்தன்னவாசல் ஓவியம்**

A) சங்க கால சோழருடையது

B) சங்க கால பாண்டியருடையது

C) பல்லவருடையது

D) களப்பிரருடையது

**65. பல்லவர்களை நினைவிற்கொள்ளக் காரணம், அவர்களின்**

A) கலை, கட்டிடக்கலை படைப்புகள்

B) நிர்வாகம்

C) சமயப் பணி

D) சாளுக்கியர்களோடு மேற்கொண்ட போர்

**66. உள்ளாட்சி முறை கொண்டு வந்தவர்கள்**

A) பல்லவர்

B) பிற்கால சோழர்

C) பிற்கால பாண்டியர்

D) விஜயநகர அரசர்கள்

**67. எது சரியாக பொருந்தியுள்ளது?**

A) யாதவர்கள் – தேவகிரி

B) ஹொய்சாளர்கள் – வாரங்கல்

C) காகத்தியர்கள் – மதுரை

D) பாண்டியர்கள் – துவாரசமுத்திரம்

**68. பட்டியல் I ஐயும் பட்டியல் II ஐயும் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) ராணா சங்கா | 1) சீனப் பயணி |
| b) அக்பர் | 2) முதலாம் பானிபட் போர் |
| c) இப்ராஹிம் லோடி | 3) கான்வாப் போர் |
| d) யுவான் சுவாங் | 4) பைராம்கான் |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 3 | 4 | 2 | 1 |

**69. இந்தியாவில் முஸ்லிம்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டிய போர்**

A) முதலாம் தரெய்ன் போர்

B) முதலாம் பானிபட் போர்

C) தலைக்கோட்டை போர்

D) இரண்டாம் தரெய்ன் போர்

**70. டெல்லி சுல்தானின் முழு அதிகாரத்தையும் பயன்படுத்த முடியாமல் தடையாக விளங்கியது**

A) தலைமை மந்திரி / பிரதம மந்திரி

B) கலிபா

C) புனித குர்ஆன்

D) உலாமாக்கள் என்ற மார்க்க அறிஞர்கள்

**71. மங்கோலியர்களுக்கு எதிராக இல்துத்மிஸ்ஸிடம் மங்கபர்னி உதவி கேட்ட போது அவர் நடுநிலைமைக் கொள்கையைக் கடைபிடித்தார், காரணம்**

A) அவருக்கு உதவி செய்யும் அளவுக்கு இல்துத்மிஸ் வலிமை பெற்றிருக்கவில்லை

B) இல்துத்மிஸ் மங்கபர்னியை வெறுத்தார்

C) ஆரம்பநிலையில் இருந்த தன் அரசை அநாவசியமாக மத்திய ஆசிய அரசியலில் நுழைக்க அவர் விரும்பவில்லை

D) இஸ்துத்மிஸ் மங்கோலியர்களை கண்டு பயந்தார்

**72. தைமூரின் படையெடுப்பு நிகழ்வுற்ற ஆண்டு**

A) கி.பி. 1392 B) கி.பி. 1398

C) கி.பி. 1408 D) கி.பி. 1396

**73. லோடி வம்சத்தை நிறுவியவர்**
- A) ஜலாலுத்தீன் பிரோஸ் கில்ஜி
- B) குத்புதீன் ஐபெக்
- C) பஹ்லோல் லோடி
- D) இப்ராஹிம் லோடி

**74. பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப் பட்ட ஆண்டு**
- A) 1700  B) 1800
- C) 1600  D) 1900

**75. இந்தியா குடியரசாக அறிவிக்கப்பட்ட நாள்**
- A) ஜனவரி 26, 1950
- B) ஜனவரி 26, 1947
- C) ஜனவரி 26, 1949
- D) ஜனவரி 26, 1948

**76. மொகஞ்சதாரோ மக்களுக்கு குடிநீர் பிரச்சனை இன்மைக்குக் காரணம்**
- A) நதிக்கு அருகில் நகரம் இருந்தது
- B) குடிநீர் பெற பெரிய குளம் இருந்தது
- C) வீடுகளுக்கு நகராட்சி குடிநீர் விநியோகிக்கப் பட்டது
- D) நகரில் பல கிணறுகள் இருந்தன

**77. கான்ட்லா துறைமுகம் அமைந்துள்ள மாநிலம்**
- A) ஆந்திரப் பிரதேசம்
- B) மஹாராஷ்டிரம்
- C) குஜராத்
- D) கேரளம்

**78. நீலப்புரட்சி தொடர்பு கொண்டது**
- A) விவசாயம்
- B) மீன் பிடித்தல்
- C) நீர்ப்பாசனம்
- D) இரும்பு எஃகு

**79. இந்தியாவில் அதிக நகரமயமாக்கப்பட்ட மாநிலம் எது?**
- A) கேரளா
- B) கர்நாடகம்
- C) மஹாராஷ்டிரம்
- D) பஞ்சாப்

**80. பொதுத்துறையில் முதன்முதலாக அமைக்கப் பட்ட இரசாயனத் தொழிற்சாலை**
- A) நெய்வேலி
- B) சிந்திரி
- C) கொச்சி
- D) டிராம்பே

**81. பட்டியல் I ஐயும் பட்டியல் II ஐயும் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு**

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | மஹாராஷ்டிரா | 1) | வண்டல் மண் |
| b) | கர்நாடகம் | 2) | சரளை மண் |
| c) | உத்திரப்பிரதேசம் | 3) | செம்மண் |
| d) | அஸ்ஸாம் | 4) | கரிசல் மண் |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 3 | 4 | 2 | 1 |

**82. இந்தியாவில் மிக அதிகமான மழை பெறும் இடம்**
- A) கல்கத்தா  B) சிரபுஞ்சி
- C) மும்பை  D) திருவனந்தபுரம்

**83. கீழ்வருவனவற்றுள் எது பிளவுப் பள்ளத் தாக்கினால் ஆனது?**
- A) காவிரி  B) கோதாவரி
- C) கோசி  D) நர்மதை

**84. பூமியின் பூமத்தியரேகை விட்டம்**
- A) 22,756 கி.மீ.  B) 12,756 கி.மீ.
- C) 40,000 கி.மீ.  D) 22,776 கி.மீ.

**85. மத்திய இந்தியாவின் வழியாக செல்லக்கூடிய முக்கிய அட்சரேகை**
- A) பூமத்திய ரேகை
- B) கடக ரேகை
- C) மகர ரேகை
- D) இவற்றுள் எதுவுமில்லை

**86. கீழ்வரும் கடற்கரையோர மாநிலங்களுள் எது அதிகமான மழையை குளிர் மாதங்களில் பெறுகின்றது?**
- A) ஆந்திரப் பிரதேசம்
- B) குஜராத்
- C) கர்நாடகா
- D) தமிழ்நாடு

**87. இந்திய மண்வகைகளுள் பொதுவாக பற்றாக்குறையாக காணப்படுவது**
- A) மாங்கனீஸ்  B) கால்சியம்
- C) நைட்ரஜன்  D) இரும்பு

**88. பொகாரோ இரும்பு எஃகு ஆலை எந்நாட்டு உதவி மற்றும் தொழில்நுட்பத்துடன் நிறுவப் பெற்றது?**

A) ஜெர்மனி
B) பிரிட்டன்
C) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
D) ரஷ்யா

**89. அலுமினியத் தாதுவின் பெயர்**

A) லிக்னைட் B) பாக்சைட்
C) பிட்டுமினஸ் D) பைரைட்

**90. கீழ்வருபவர்களில் மிகவும் அதிகமாக நகரப் பகுதிகளில் வசிப்போர்**

A) முஸ்லீம்கள்
B) இந்துக்கள்
C) பார்ஸி இனத்தவர்
D) குஜராத்திகள்

**91. எந்நகரம் 'செந்நகரம்' என்று அழைக்கப் படுகின்றது?**

A) ஜெய்பூர் B) ஜோத்பூர்
C) குவாலியர் D) புது டெல்லி

**92. ஜிப்சம் காணப்படும் மாநிலம்**

A) இராஜஸ்தான்
B) பீஹார்
C) குஜராத்
D) மத்தியப்பிரதேசம்

**93. தமிழ்நாட்டில் உள்ள காடுகளின் பரப்பளவு சதவீதம்**

A) 10 % B) 15 %
C) 17 % D) 18 %

**94. பட்டியல் Iஐயும் பட்டியல் IIஐயும் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) எஸ். எ. ஐ. எல். | 1) 1969 ஆம் வருடம் தேசியமயமாக்கப் பட்டது |
| b) விவசாயம் | 2) முடக்கப்பட்ட துணி தொழிற்சாலை |
| c) என்.டி.சி. | 3) டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் |
| d) பரோடா வங்கி | 4) இரும்பு உலோக தொழிற்சாலை |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 1 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 2 | 1 | 3 | 4 |

**95. இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரக் கணக்கு பாதகமாகவே இருந்து வருவதற்கான காரணம்**

A) நலிவான வெளிநாட்டுக் கொள்கை
B) ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக இருப்பது
C) குறைவான ஏற்றுமதி வசதிகள்
D) தரம் குறைந்த ஏற்றுமதிப் பொருட்கள்

**96. நிதிக்குழு செயல்படுவதின் நோக்கம்**

A) மத்திய அரசின் வருவாய் மூலங்களைப் பெருக்குவது
B) பொதுச் செலவை கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறைகளை ஆராய்வது
C) மத்திய–மாநில நிதி உறவு
D) மேற்கண்ட எல்லாம் சரி

**97. தனியார்மயமாக்கலை ஊக்குவிக்க சமீபத்தில் மத்திய அரசால் முடிவு செய்யப்பட்ட துறை**

A) தகவல் தொடர்பு B) மின்சாரம்
C) காப்பீடு D) இவை அனைத்தும்

**98. உலகமயமாக்குதல் என்பது**

A) உலகம் முழுவதும் கூட்டுறவை வளர்த்தல்
B) அங்காடியின் அளவினை ஒரு நாட்டின் எல்லைக்கப்பாலும் விரிவடையச் செய்வது
C) உலக நாடுகளின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல்
D) இவற்றில் எதுவும் இல்லை

**99. கீழ்க்கண்டவற்றில் எதில் ஏற்படும் மாற்றம் பொருளாதார வளர்ச்சியை அளக்க உதவும்?**

A) தலைவிகித உண்மை வருமானம்
B) உழைப்பாளிகளின் சராசரி வாழ்க்கைச் செலவு
C) மொத்த தேசிய வருமானம்
D) இவை எதுவுமில்லை

**100. MRTP சட்டம் செல்லுபடியாவது**

A) தனியார் துறையில் மட்டும்
B) பொதுத் துறையில் மட்டும்
C) பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும்
D) தனியார் மற்றும் பொதுத்துறைகளில்

– 1996 **101. இந்தியாவில் மிக அதிக வருவாயைத் தரும் வரி**

A) நேர்முக வரிகள்
B) மறைமுக வரிகள்
C) விற்பனை வரி
D) கலால் வரி

**102. பணவீக்கத்தை குறைக்க மேற்கொள்ள வேண்டிய தற்காலிக நடவடிக்கை**

A) வரிகளை குறைக்க வேண்டும்
B) தொழிலாளர்களின் கூலியை உயர்த்த வேண்டும்
C) பண அளிப்பை குறைக்க வேண்டும்
D) பண அளிப்பை அதிகரிக்க வேண்டும்

**103. பணக்கொள்கையின் நோக்கம்**

A) பணப் புழக்கத்தை அதிகரித்துதல்
B) வணிக வங்கிகளின் கடன் பெருக்கத்தை உயர்த்தல்
C) விலைகளை நிலைப்படுத்துதல்
D) தலைவிகித வருமானத்தை உயர்த்துதல்

**104. மக்கள்தொகை பெருக்கத்தைப் பற்றி எச்சரிக்கை செய்த பொருளியல் அறிஞர்**

A) ஆடம் ஸ்மித் B) மால்தஸ்
C) கார்ல் மார்க்ஸ் D) ஜே.எம்.கீன்ஸ்.

**105. கீழ்க்காண்பவற்றில் எந்த மாநிலம் வாணிபம் மற்றும் தொழில்துறையில் முதலிடம் வகிக்கிறது?**

A) மஹாராஷ்டிரம்
B) தமிழ் நாடு
C) உத்திரபிரதேசம்
D) மேற்கு வங்காளம்

**106. வேலைவாய்ப்பைப் பொறுத்து கீழ்க்கண்டவற்றில் சரியான வரிசையை தேர்வு செய்**

I. இரயில் போக்குவரத்து
II. விவசாயம்
III. சாலைப் போக்குவரத்து
IV. ஏற்றுமதி வணிகம்

**இவற்றில்**

A) II, I, III, IV B) I, II, IV, III
C) II, III, IV, I D) IV, I, III, II

**107. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி**

**கூற்று (A):** மறைமுக வேலையின்மை பெரும் பாலும் விவசாயத் துறையில் காணப்படுகிறது.

**காரணம் (R):** கிராமப்புற மக்கள் மேலும் மேலும் கல்வியறிவு பெற்று வருகிறார்கள்.

**கீழ்க்காணும் குறியீடு மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

A) (A) மற்றம் (R) இரண்டும் சரி; மேலும் (A) க்கு சரியான விளக்கம் (R) ஆகும்
B) (A)மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (A) க்கு சரியான விளககம் (R) அல்ல
C) (A) சரி; மற்றும் (R) தவறு
D) (A) தவறு; மற்றும் (R) சரி

**108. விரிவுபடுத்துக : எம்.ஆர்.டி.எஸ்.**

A) மாஸ் ரோடு டிரான்ஸ்போர்ட் சிஸ்டம்
B) மெட்ராஸ் ரோடு டிரான்ஸ்போர்ட் சிஸ்டம்
C) மாஸ் ரேபிட் டிரான்ஸ்போர்ட் சிஸ்டம்
D) மெட்ராஸ் ரவுண்ட் டிரிப் சிஸ்டம்

**109. IRBI குறிப்பது**

A) இந்திய கிராமப்புற தொழில் வங்கி
B) இந்திய முதலீட்டு கிராமப்புற வங்கி
C) இந்திய தொழிற்துறை புதுப்பிக்கும் வங்கி
D) இவற்றில் எதுவும் இல்லை

**110. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க**

I. பசுமை புரட்சி என்பது பச்சை மரங்களை மேன்மேலும் வளர்ப்பது
II. தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவது பசுமைப் புரட்சியாகும்
III. பசுமை புரட்சி என்பது பச்சை நிற வர்ணத்தின்விற்பனையை அதிகரித்தல்
IV. வீரிய வித்துக்கள் மூலம் விவசாய உற்பத்தியை பெருக்குதல்

**இவற்றில்**

A) I மற்றும் II சரியானவை
B) II மற்றும் III சரியானவை
C) I மட்டும் சரியானவை
D) IV மட்டும் சரியானவை

**111. உயர்நீதிமன்ற நீதிபதியின் ஓய்வு கால வயது**

A) 62 வயது B) 60 வயது
C) 65 வயது D) 58 வயது

**112. இந்தியாவில் நீதிப் புனராய்வு அதிகாரம் யார் பொற்றிருக்கிறார்கள்?**

A) குடியரசுத் தலைவர்
B) பிரதம மந்திரி

C) உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம்
D) பாராளுமன்றம்

**113. மேலவையின் தலைவருக்கு**
A) வாக்குரிமை இல்லை
B) சமன்நிலை முரண்பாடு சமயம் வாக்குரிமை பெறுகிறார்
C) பிற உறுப்பினர் போல் ஒரு வாக்குரிமை பெற்றிருக்கிறார்
D) சட்ட திருத்த மசோதாவின் போது வாக்குரிமை பெறுகிறார்

**114. மேலவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை**
A) 250 B) 245
C) 240 D) 200

**115. இந்திய துணைக் குடியரசுத் தலைவர்**
A) பாராளுமன்ற இரு அவைகளில் ஏதேனும் ஒரு அவை உறுப்பினராக இருப்பார்
B) மேலவையின் உறுப்பினர்
C) பாராளுமன்றத்தின் தனிப்பிரிவைச் சார்ந்தவர்
D) பாராளுமன்றத்தின் உறுப்பினர் அல்ல

**116. இந்தியக் குடியரசுத் தலைவருடைய பதவிப் பிரமாணத்தை நடத்தி வைப்பவர்**
A) கீழவையின் சபாநாயகர்
B) இந்திய தலைமை நீதிபதி
C) இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர்
D) இவற்றில் எதுவுமில்லை

**117. உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிப்பவர்**
A) தலைமை அமைச்சர்
B) குடியரசுத் தலைவர்
C) தலைமை நீதிபதி
D) மக்களவை

**118. இந்தியத் தணிக்கைத் துறை உயர் அதிகாரியை நியமிப்பது**
A) குடியரசுத் தலைவர்
B) நிதி ஆணையம்
C) பிரதம மந்திரி
D) முதன்மை நிதிச் செயலர்

**119. ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பது**
A) பாராளுமன்ற இரு அவைகளின் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர்கள்
B) மாநில சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்
C) பாராளுமன்றத்தின் இருஅவை உறுப்பினர்கள்
D) பாராளுமன்ற இரு அவைகளின் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

**120. இந்தியா ஒரு**
A) இருமொழி கொண்ட நாடு
B) மதச்சார்பற்ற நாடு
C) இந்து நாடு
D) இவற்றுள் எதுவுமில்லை

**121. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள்**
A) நவம்பர் 26, 1948
B) ஜனவரி 26, 1950
C) நவம்பர் 26, 1950
D) ஆகஸ்ட் 15, 1947

**122. அரசியலமைப்பு நிர்ணயசபையின் வரைவுக்குழு தலைவராக இருந்தவர் யார்?**
A) பி.ஆர். அம்பேத்கார்
B) ஜவஹர்லால் நேரு
C) டாக்டர் இராஜேந்திர பிரசாத்
D) சி.ஆர். ராஜகோபாலாச்சாரி

**123. அரசியலமைப்பு நிர்ணய சபையினால், இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாட்கள்**
A) 2 வருடங்கள் 11 மாதங்கள் 17 நாட்கள்
B) 3 வருடங்கள் 10 மாதங்கள் 20 நாட்கள்
C) 4 வருடங்கள் 11 மாதங்கள் 17 நாட்கள்
D) 5 வருடங்கள் 6 மாதங்கள் 5 நாட்கள்

**124. தேசியம் என்ற சொல்லுக்குப் பொருள்**
A) ஒரே மதத்தைச் சார்ந்த மக்களைக் குறிப்பது
B) ஒரே இனத்தைச் சார்ந்த மக்களைக் குறிப்பது
C) ஒரே பொதுவான மூதாதையரைக் கொண்ட மக்களைக் குறிப்பது
D) மக்கள் ஒரே இடத்தில் நீண்ட நாட்களாக ஒருங்கி ணைந்து வாழ்ந்ததைக் குறிப்பது

**125. இந்தியக் குடியரசு எவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது**
A) உயர் அதிகாரம் பெற்ற, சமதர்ம, மக்களாட்சிக் குடியரசு என்று
B) உயர் அதிகாரம் பெற்ற, மக்களாட்சியுடைய சாதி பேத மற்ற குடியரசு என்று

**C)** உயர் அதிகாரம் பெற்ற, சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சிக் குடியரசு என்று

**D)** உயர் அதிகாரம் பெற்ற, சமதர்ம மக்களாட்சியுடைய, சாதிபேதமற்றக் குடியரசு என்று

**126. எந்த ஒரு குறிப்பிட்ட மதத்துக்கும் காப்பாளராக இல்லாத அரசை நாம் குறிப்பிடுவது**

**A)** மக்களாட்சி அரசு

**B)** கூட்டாட்சி அரசு

**C)** மதச்சார்பற்ற அரசு

**D)** அரசாங்கமற்ற அரசு

**127. எத்தனை வகையான அடிப்படை உரிமைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு உத்திரவாத மளித்துள்ளது?**

**A)** 8 **B)** 6

**C)** 7 **D)** 9

**128. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி**

**கூற்று (A) :** இந்திய ஜனாதிபதி அவசர சட்டத்தை பிரகடனப்படுத்தலாம்.

**காரணம் (R):** போர்காலம், நிதிநிலை பற்றாக் குறை, பலவீனமான அரசாங்கம் போன்ற சூழ்நிலைகளின் போது.

**கீழ்க்காணும் குறியீடு மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

**A)** (A) மட்டும் சரி

**B)** (R) மட்டும் சரி

**C)** (A) மற்றும் (R) சரி

**D)** (A) மற்றும் (R) தவறு

**129. இந்தியாவின் அரசியலமைப்பு எந்த சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது?**

**A)** 1909 ஆம் ஆண்டு மிண்டோ மார்லி சட்டம்

**B)** 1935 ஆம் ஆண்டு இந்திய சட்டம்

**C)** 1947 ஆம் ஆண்டு விடுதலை சட்டம்

**D)** 1919 ஆம் ஆண்டு சட்டம்

**130. கீழ்வருவனவற்றுள் தவறானது எது?**

**A)** ஆரிய சமாஜம் – தயானந்த சரஸ்வதி

**B)** பிரம்ம சமாஜம் – ராஜா ராம்மோகன் ராவ்

**C)** தேவ சமாஜம் – அக்னிஹோத்ரி

**D)** பிரார்த்தனா சமாஜம் – விவேகானந்தர்

**131. கீழே உள்ளவற்றில் பொருந்தாதது எது?**

**A)** காரன்வாலிஸ் பிரபு – நிரந்தர நிலவரி திட்டம்

**B)** வெல்லெஸ்ஸி பிரபு – துணைப்படைத் திட்டம்

**C)** டல்ஹௌசி பிரபு – நாடு இழக்கும் கொள்கை

**D)** ரிப்பன் பிரபு – சதி ஒழிப்பு

**132. இந்திய தண்டனைச் சட்டங்களை உருவாக்கியவர்**

**A)** டாக்டர் அம்பேத்கார்

**B)** மவுண்ட்பேட்டன் பிரபு

**C)** மெக்காலே பிரபு

**D)** வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபு

**133. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியாவிற்கு வருகை புரிந்த இங்கிலாந்து அரசி**

**A)** எலிசபெத்

**B)** ஆன் அரசி

**C)** விக்டோரியா

**D)** மார்கரெட்

**134. இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கிய இங்கிலாந்து பிரதமர்**

**A)** சர்ச்சில்

**B)** மாக்டொனால்டு

**C)** சம்பர்லின் பிரபு

**D)** அட்லி பிரபு

**135. 1907 ல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் தீவிரவாத தலைவர்கள் வெளியேறியது**

**A)** தலைமையை எதிர்த்து

**B)** விருப்பம் இன்மையால்

**C)** முஸ்லீம்களை எதிர்த்து

**D)** கட்சி தேர்தலை முன்னிட்டு

**136. இந்தியாவில் பூமிதான இயக்கத்தை துவக்கிய தலைவர்**

**A)** ஜெயப்பிரகாஷ் நாராயணன்

**B)** ஆச்சார்யா வினோபா பாவே

**C)** மதன்மோகன் மாளவியா

**D)** நம்பூதிரிபாத்

**137. காந்திஜியின் தலைமையில் வெள்ளையனே வெளியேறு போராட்டம் நடந்த நாள்**

**A)** 10.8.1942

**B)** 9.8.1942

**C)** 26.8.1942

**D)** 20.8.1942

**138. ஆங்கிலேய அரசு இந்தியாவுக்கு விடுதலை அளிக்க ஆகஸ்டு 15 எனத் தீர்மானித்தது, ஏன்?**
A) இந்தியாவில் வெள்ளையர்கள் வந்திறங்கிய நாளைக் கொண்டாட
B) இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் சரணடைந்ததைக் கொண்டாட
C) பிரிட்டிஷ் அரசி முடிசூட்டிய நாளைக் கொண்டாட
D) இவைகளில் எதுவும் இல்லை

**139. ஹீவான்–சுவாங் எந்த வருடம் இந்தியா வந்தார்?**
A) கி.பி.640 B) கி.பி.630
C) கி.பி.639 D) கி.பி.629

**140. முதலாவது வட்டமேஜை மாநாட்டில் (1930–31) டாக்டர் அம்பேத்கார் கலந்து கொண்டது**
A) காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாக
B) இளவரசர்கள் மற்றும் பிற கட்சிகளின் பிரதிநிதியாக
C) தன் சொந்த செல்வாக்கில்
D) தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக

**141. எந்த கடல் நமது தேசிய கீதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது?**
A) வங்கக் கடல்
B) இந்தியப் பெருங்கடல்
C) அரேபியக் கடல்
D) இவற்றுள் எதுவுமில்லை

**142. காந்தியடிகளும் மூன்று வட்டமேஜை மாநாடுகளும் பற்றிய கூற்றுகளில் பின்வருவனவற்றில் எது சரி?**
A) காந்தியடிகள் முதல் வட்டமேஜை மாநாட்டில் மட்டும் கலந்து கொண்டார்
B) காந்தியடிகள் இரண்டாம் வட்டமேஜை மாநாட்டில் மட்டும் கலந்துகொண்டார்
C) காந்தியடிகள் முதல் மற்றும் இரண்டாம் வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டார்
D) காந்தியடிகள் மூன்றாவது வட்டமேஜை மாநாட்டில் மட்டும் கலந்துகொண்டார் மேற்கூறியவைகளில் எவை சரியான கூற்று?

**143. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்**
A) டாக்டர் இராதாகிருஷ்ணன்
B) டாக்டர் ராஜேந்திர பிரசாத்
C) திரு. ராஜகோபாலச்சாரியார்
D) எஸ்.டி. சர்மா

**144. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்**
A) மௌண்ட்பேட்டன் பிரபு
B) செம்ஸ்போர்டு பிரபு
C) சுரேந்திரநாத் பானர்ஜி
D) டாக்டர் சி. ராஜகோபாலாச்சாரி

**145. வேலூர் சிப்பாய் கலகம் ஏற்பட்ட ஆண்டு**
A) 1801 B) 1805
C) 1806 D) 1857

**146. இந்திய அரசயிலமைப்பு நிர்ணய சபையின் தலைவர்**
A) டாக்டர் அம்பேத்கார்
B) ஆலடி கிருஷ்ணசாமி ஐயர்
C) ராஜாஜி
D) டாக்டர் ராஜேந்திர பிரசாத்

**147. ஆஸ்திரேலியாவின் தேசிய சின்னம்**
A) கழுகு B) கங்காரு
C) புலி D) சிங்கம்

**148. இந்தியாவின் மிகச் சிறிய மாநிலம்**
A) டில்லி B) சிக்கிம்
C) பாண்டிச்சேரி D) கோவா

**149. ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர்**
A) சுப்ரட்டோ
B) கோஃபி அன்னன்
C) பில் கிளின்டன்
D) யாசர் அராஃபத்

**150. "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" என்ற புத்தகத்தை எழுதியவர்**
A) மகாத்மா காந்தி
B) ஆர்.கே. நாராயண்
C) ஜவஹர்லால் நேரு
D) மொரார்ஜி தேசாய்

**151. 'தங்கக் கோயில் நகரம்' என்றழைக்கப்படுவது**
A) அமிர்தசரஸ் B) தஞ்சாவூர்
C) ஜெய்ப்பூர் D) சண்டிகர்

**152. 1998 இல் அணு ஆயுதப் பரிசோதனை (நம் நாட்டில்) நடத்தப்பட்ட இடம்**
A) டெஹ்ராடூன் B) டெல்லி
C) பொக்ரான் D) கல்கத்தா

– 1996 **153. நமது தேசிய கீதத்தை எழுதியவர்**

A) சரோஜினி நாயுடு
B) ரவீந்திரநாத் தாகூர்
C) பாரதியார்
D) கண்ணதாசன்

**154. டாக்டர் இராதாகிருஷ்ணனின் பிறந்த தினம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுவது**

A) ஊழியர் தினம்
B) குழந்தைகள் தினம்
C) ஆசிரியர் தினம்
D) இளைஞர் தினம்

**155. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்**

A) பாளையங்கோட்டை B) சிவகாசி
C) கயத்தாறு D) மதுரை

**156. இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர்**

A) லால்பகதூர் சாஸ்திரி
B) திருமதி. இந்திராகாந்தி
C) ஜவஹர்லால் நேரு
D) அடல் பிஹாரி வாஜ்பேயி

**157. நமது தேசத்தின் தந்தை என்பவர்**

A) வினோபாவே
B) மகாத்மா காந்தி
C) மோதிலால் நேரு
D) ஜெயபிரகாஷ் நாராயண்

**158. முதல் இந்திய சுப்ரீம் கோர்ட் பெண் நீதிபதி**

A) அண்ணா சான்டி
B) பத்மினி ஜேசுதுரை
C) பாத்திமா பீவி
D) துர்கா பேனர்ஜி

**159. கீழ்கண்ட நாடுகளில் எந்த நாடு ஐ.நா. சபை உறுப்பினராக இல்லை?**

A) ஜப்பான் B) சுவிட்சர்லாந்து
C) ஜெர்மனி D) பிரான்சு

**160. டூரண்ட் கோப்பை எந்த விளையாட்டுடன் சம்பந்தப்பட்டது?**

A) ஹாக்கி
B) கூடைப்பந்து
C) கால்பந்து
D) கிரிக்கெட்

**161. காவிரி நீர்ப் பிரச்சனையில் தொடர்புள்ள மாநிலங்கள்**

A) பாண்டிச்சேரி, மஹாராஷ்டிரம் மற்றும் கர்நாடகம்
B) பாண்டிச்சேரி, தமிழ்நாடு மற்றும் கர்நாடகம்
C) தமிழ்நாடு மற்றும் கர்நாடகம்
D) பாண்டிச்சேரி மற்றும் கர்நாடகம்

**162. இரானி கோப்பை எந்த விளையாட்டுக்குத் தரப்படுகிறது?**

A) கூடைப்பந்து
B) கிரிக்கெட்
C) கோல்ஃப்
D) வாலிபால்

**163. 1998ல் வங்காளதேச சுதந்திர தின கோப்பை கிரிக்கெட் போட்டி நடந்த இடம்**

A) கராச்சி B) டெல்லி
C) டாக்கா D) காஷ்மீர்

**164. தமிழ்நாட்டில் ஏரி மாவட்டம் என்று எது அழைக்கப்படுகிறது?**

A) புதுக்கோட்டை
B) செங்கல்பட்டு
C) இராமநாதபுரம்
D) விழுப்புரம்

**165. உலகின் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரம் எங்கு உள்ளது?**

A) தென் ஆப்பிரிக்கா
B) தென் அமெரிக்கா
C) பிரான்ஸ்
D) இமயமலை

**166. 1998 ஆம் ஆண்டு காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டு போட்டிகள் நடைபெற்ற நாடு**

A) மாலத் தீவுகள்
B) மலேசியா
C) மெக்சிகோ
D) மியன்மார்

**167. 1998 ஆம் ஆண்டின் விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் வென்றவர்**

A) அகாஸி
B) பீட் சாம்ப்ரஸ்
C) லியாண்டர் பெய்ஸ்
D) மகேஷ் பூபதி

**168. எந்த நாடு 1998 உலக கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றது?**

A) அர்ஜென்டினா B) இங்கிலாந்து
C) பிரான்ஸ் D) ஹாலந்து

**169. இலக்கியத்திற்காக நோபல் பரிசு வென்ற இந்தியர்**

A) இரவீந்திரநாத் தாகூர்
B) இராதாகிருஷ்ணன்
C) சர். சி.வி. இராமன்
D) கண்ணதாசன்

**170. தேசிய வேதியியல் ஆய்வுக்கூடம் உள்ள இடம்**

A) மும்பை B) பூனே
C) கோவா D) டெல்லி

**171. 1996 ஆம் ஆண்டின் உலக கிரிக்கெட் பட்டத்தை வென்ற நாடு**

A) ஸ்ரீலங்கா B) பாகிஸ்தான்
C) ஆஸ்திரேலியா D) இந்தியா

**172. இந்திய நாட்டின் தேசிய மிருகம்**

A) சிங்கம் B) புலி
C) மான் D) காண்டாமிருகம்

**173. இந்தியாவின் பிரபலமான சதுரங்க ஆட்டக்காரர்**

A) விஸ்வநாத் ஆனந்த் B) ஆரோன்
C) கிருஷ்ணன் D) கீத் சேத்தி

**174. கல்கத்தா துறைமுகம் அமைந்துள்ள நதி**

A) கங்கை B) பத்மா
C) கோதாவரி D) ஹூக்ளி

**175. தென்னிந்தியாவின் மான்செஸ்டர்**

A) திருப்பூர் B) கோயம்புத்தூர்
C) கரூர் D) மதுரை

**176. இந்தியாவின் முக்கிய செய்தித் தொழில்நுட்ப (IT) மையம் உள்ள இடம்**

A) பெங்களூர் B) மும்பை
C) ஹைதராபாத் D) சென்னை

**177. ஆந்திர பிரதேசத்தின் தலைநகரம்**

A) வாரங்கல் B) விசாகபட்டிணம்
C) ஹைதராபாத் D) மைசூர்

**178. பங்களாதேசம் சுதந்திரமடைந்த ஆண்டு**

A) 1971 B) 1947
C) 1965 D) 1952

**179. இந்தியா குடியரசு நாடான ஆண்டு**

A) 1947 B) 1952
C) 1950 D) 1942

**180. தென்னிந்தியாவில் உள்ள உயர்ந்த சிகரம்**

A) தொட்டபெட்டா B) ஆனைமுடி
C) திருமலா D) நந்திதுர்க்கம்

**181. A=1, B=3, C=5 எனில் 3, 9, 7 என்றால் என்ன?**

A) BID B) BAD
C) BED D) CAR

**182. கொடுக்கப்பட்ட தொடரை பூர்த்தி செய்க? குறியிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் 2, 7, 14, 23, ? , 47**

A) 30 B) 34
C) 39 D) 44

**183. இரண்டு எண்களின் LCM 72 ஆகும். அதன் HCF ஆனது 12 ஆக இருந்து, ஒரு எண் 24 ஆக இருந்தால் அடுத்த எண்**

A) 48 B) 36
C) 18 D) 30

**184. N என்பது 5–ன் மடங்கான ஒரு எண். கீழ்காண்பவைகளில் எவையெல்லாம் 5–ன் மடங்காக இருக்கும்?**

I. $N + 15$
II. $7N$
III. $\frac{N}{5}$

**இவற்றில்**

A) I மட்டும் B) II மட்டும்
C) III மட்டும் D) I மற்றும் II

**185. கீழ்க்காணும் எண்களில் முப்படி உள்ள எண்**

A) 1726 B) 2197
C) 2472 D) 5620

**186. பின்வரும் பின்னங்களில் எது அதிகமானது?**

A) $\frac{2}{3}$ B) $\frac{3}{4}$
C) $\frac{4}{5}$ D) $\frac{5}{6}$

**187. எது மாறுபட்டுள்ளது?**

**BCFG, HUK, LMST, VWXY**

A) BCFG B) HUK
C) LMST D) VWXY

**188. முதல் ஐந்து ஒற்றை இலக்கங்களின் கூட்டுத்தொகை**

A) 15 B) 25
C) 16 D) 18

– 1996 **189. ஒருவர் தனது பணத்தில் 3ல் 1 பங்கு மகனுக்கும், 4ல்1 பங்கு மகளுக்கும் கொடுத்தது போக மீதமுள்ள ரூ.20,000–ஐ மனைவிக்கு தருகிறார் என்றால் அவரது பணத்தின் மதிப்பு**

A) ரூ. 50, 000 B) ரூ. 48, 000
C) ரூ. 80, 000 D) ரூ. 60, 000

**190. ஒரு பயணி, ரயில் பயணத்தின்போது ஈரமான ஒரு சட்டையினை உலர வைக்க எண்ணி, ஜன்னல் வழியாக வெளியே பிடித்துக் கொள்கிறார். அவர் ரயில் செல்லும் திசையிலேயே சட்டை பறக்கும் என எண்ணுகிறார். அவரது எண்ணம்**

A) சரியானது
B) பகுதி சரியானது
C) முற்றிலும் தவறு
D) முடிவுக்க வர தகவல் போதுமானதல்ல

**191. கொடுத்துள்ள படத்தின் E யின் பாகத்தின் கோணம் எவ்வளவு?**




A) $15^0$ B) $24^0$
C) $48^0$ D) $54^0$

